பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4.00

சுடர்: 6 பிரமோதூத ஸ்ரீ மார்கழி மீ 05 உ வியாழக்கிழமை (20-12-1990) UTHAYAN — A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்: 24

# கட்டுவனில் நேற்று கடும் மோதல்

# 8 பெண் புலிகள் உயிர்த்தியாகம்

## இழப்புடன் ராணுவம் பின்வாங்கியது

யாழ்ப்பாணம், டிசம்பர் 20

**நேற்றுக் காலை கட்டுவன் பகுதியில் இருந்து இராணுவம் வெளியேற முயன்றபோது அப் பகுதியில் கடும் மோதல் மூண்டது.**

**மல்லாகம் — கட்டுவன் வீதி வழியே முன்னேற முயன்ற இராணுவத்தைத் தாக்கி, முகாமுக்குள் பின்வாங்கச் செய்யும் தீர முயற்சியில் எட்டுப் பெண் போராளிகள் தமது உயிரைத் தியாகம் செய்தனர்.**

போராளிகளின் தாக்குதல்களை அடுத்து முன்னேற முயன்ற இராணுவத்தினர் இழப்புகளுடன் பின்வாங்கினர்.

முகாம் திரும்பிய இராணுவத்தினர் அங்கிருந்து குடிமனைகளை நோக்கி ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர்.

ஏழாலை, மல்லாகம், குப்பிளான் ஆகிய பகுதிகளில் ஷெல்கள் விழுந்து வெடித்தன.

இதனைத் தொடர்ந்து போர் விமானம் ஒன்று கட்டுவன் பகுதியைச் சுற்றி தாக்கு

[2 ஆம் பக்கம் பார்க்க]

## காங்கேசனுக்கு கப்பல்; சாத்தியம் அதிகரிப்பு

### பேச்சுக்கள் தொடர்ந்து நடைபெறுகின்றன

கப்பல்களில் வரும் பொருள்களை காங்கேசன்துறை துறைமுகத்தில் வைத்து இறக்குவது குறித்து தொடர்ந்து பேச்சுக்கள் நடைபெற்று வருகின்றன.

இந்தப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணப்பட்டுள்ள காரணத்தினால், அரச அதிபர் குழுவினர் நேற்று நயினாதீவுக்குச் செல்லவில்லை. இறுதி நேரத்தில் உத்தேச விஜயம் ஒத்திவைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

படையினர் காங்கேசனில் முகாமிட்டிருக்கின்ற போதிலும், அங்கு பொருள்களை இறக்குவது சாத்தியப்படலாம் என நம்பப்படுகிறது.

இதற்கான இணக்கம் ஒன்று விரைவில் ஏற்படும் என்று அறியப்படுகிறது. [ஓ-3]

## மூவர் படுகொலை

கடந்த திங்கட்கிழமை காலை 5.30 மணிக்கு அக்கரைப்பற்று, ஆலையடிவேம்பு பகுதியில் மூன்று ஆண்களை பாதுகாப்புப் படையினர் கொடூரமான முறையில் சுட்டுக் கொன்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (உ-எ)

### யாழ். பல்கலைக் கழகத்துக்குரிய

## ரூ. 6 கோடி பெறுமதியான கருவிகள் கொழும்பில் கேட்பாரற்ற நிலையில்!

யாழ்ப்பாணம், டிச. 20

யாழ். பல்கலைக்கழகத்துக்கு பிரிட்டிஷ் அரசு அன்பளிப்பாக வழங்கிய ஆறுகோடி ரூபா பெறுமதியான உபகரணங்கள் கொழும்புத் துறைமுகத்தில் கேட்பாரற்றுக் கிடக்கின்றன.

கடந்த ஆகஸ்ட் மாதம் கப்பல் மூலம்— இரு கொள்கலன்களில் இவை கொழும்புக்குக் கொண்டு வரப்பட்டன.

நாட்டு நிலைமை காரணமாக அந்த இரு கொள்கலன்களையும் இங்கு எடுத்து வர முடியாது போயிற்று.

யாழ். பல்கலைக்கழகத்துக்கென அனுப்பப்படும் உபகரண கொள்கலன்களைக் கொழும்பில் வைத்து திறக்க முடியாது —

அவை யாழ்ப்பாணத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு, அங்கேயே திறக்க முடியும் என்ற ஓர் இணக்கத்தின் கீழேயே பிரிட்டிஷ் அரசால் உபகரணங்கள் அனுப்பப்பட்டன.

அதனால் கொள்கலன்கள் திறக்கப்படாமல் துறைமுகத்திலேயே கிடக்கின்றன. அவற்றிலுள்ள உபகரணங்கள் பழுதடையலாம் என அஞ்சப்படுகிறது. [ஓ-3]

## பன்மதவாச்சித் தாக்குதலில் 8 படையினர் பலியாகினர்

கொழும்பு, டிச 20

திருகோணமலை மாவட்டம், பன்மதவாச்சியில் கடந்த செவ்வாய் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் உயிரிழந்த பாதுகாப்புப் படையினரின் எண்ணிக்கை எட்டு ஆகும்.

இவர்களில் திருமலை மாவட்ட இராணுவத் தளபதி பிரிகேடியர் விஜேரத்தினாவும், சிரேஷ்ட பொலீஸ் அதிபர் றிச்சர்ட் விஜேசேகராவும் அடங்குகின்றனர்,

பிரிகேடியரின் இறுதிச் சடங்குகள் எதிர்வரும் சனிக்கிழமை காலியிலும் சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் றிச்சர்ட் விஜேசேகராவின் இறுதிச் சடங்குகள் இன்று களுத்துறையிலும் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது.

## முன்னால்போனவை தப்பின; பிரிகேடியரின் ஜீப் சிக்கியது!

கொழும்பு, டிச. 20

பன்மதவாச்சியில் நேற்று முன் தினம் இடம்பெற்ற கண்ணிவெடித் தாக்குதல் சம்பவத்தின்போது வீதியில் முன்னால் சென்ற இரண்டு இராணுவ வாகனங்கள் முதலில் கண்ணிவெடிக்கு மேலாகச் சென்றன. ஆனால் அச்சமயம் கண்ணிவெடி வெடிக்க வைக்கப்படவில்லை.

ஆனால் அவற்றின் பின்னால் பிரிகேடியர் எஸ்.மன் விஜேரத்னாவும், சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் றிச்

[2 ஆம் பக்கம் பார்க்க]

## டிராக்டர் மீது ஹெலி சூடு!

நேற்று பகல் 10-30 மணியளவில் கொடிகாமம் கச்சாய் வீதியில் சென்றுகொண்டிருந்த டிராக்டர்மீது ஹெலியிலிருந்து தாக்குதல் நடத்தப்பட்டது.

டிராக்டரில் சென்றவர்கள் ஓடித் தப்பிவிட்டனர். (ஓ-117)

## வவுனியா களஞ்சிய உணவு நகர மக்களுக்கு மட்டும் தான்!

வவுனியா, டிச 20

வவுனியாவிலுள்ள உணவுக் களஞ்சியத்தில் போதியளவு உணவுப் பொருள்கள் உள்ளன. அந்தப் பொருள்கள் வவுனியா மாவட்டத்திலுள்ள அனைவருக்கும் கிடைக்காது. குறிப்பிட்ட சிலருக்கே - நகரில் உள்ள மக்களுக்கு மட்டுமே கிடைக்கும்.

வவுனியாவிலுள்ள உணவுக் களஞ்சியத்தில் இருந்தே இங்குள்ள எல்லா ப. நோ. கூ. சங்கக் கிளைகளுக்கும் உணவுப் பொருள்கள் விநியோகிக்கப்பட்டு வந்தன.

திடீரென கடந்த 23 ஆம் திகதி முதல் படையினரால் இதற்குத் தடைவிதிக்கப்பட்டது.

நகருக்கு வெளியேயுள்ள ப. நோ. கூ. சங்கக் கிளைகளுக்குப் பொருள்கள் விநியோகிக்கக் கூடாது என்பதே அந்த அவசரத் தடை உத்தரவாகும்.

ஆனால் நகருக்குள் உள்ள ப, நோ. கூ. சங்கக் கிளைகளுக்கு உணவுப் பொருள்களை எடுத்துச் செல்ல எந்தத் தடையும் இல்லை.

படையினரின் இந்த நடவடிக்கையால் நகருக்கு வெளியே கிராம மற்றும் குடியேற்றப் பகுதிகளில் உள்ள பெரும் எண்ணிக்கையான தமிழ் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இப்போது அங்கெல்லாம் உணவுப் பொருள்களுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது. [ஓ-3-164]

## மாங்குளம் மிதி வெடியில் ஒருவர் பலி!

யாழ்ப்பாணம், டிச.20

மாங்குளம் இராணுவ முகாம் அமைந்திருந்த பகுதியில் நேற்று மிதி வெடியில் சிக்கிய ஒருவர் உயிரிழந்தார்.

மாங்குளத்தைச் சேர்ந்த உலகநாதன் செல்வரத்தினம் (30 வயது) யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்து வரப்படும் வழியில் மரணமானார்.

அவரது சடலம் யாழ் ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டிருந்தது. [ஓ-15]

## கொடிகாமம் சந்தை மீது ஹெலி சூடு! ஒருவர் பலி!!

தென்மராட்சி, டிச. 20

கொடிகாமம் சந்தையில் நேற்றுக் காலை 7.30 மணியளவில் மக்கள் கூடியிருந்த வேளையில் ஹெலி ஒன்று அப்பகுதியில் கண்மூடித்தனமாக வேட்டுக்களைத் தீர்த்தது.

சந்தையில் கூடியிருந்தவர்கள் செய்வதறியாது, திக்குத் திசையின்றிச் சிதறி ஓடினர்.

இந்தத் தாக்குதலில் அப்பாவிப் பொதுமகன் ஒருவர் உயிரிழந்தார். பலர் காயமடைந்தனர்.

உயிரிழந்தவர் தும்பளையைச் சேர்ந்த முருகேசு மரியதாஸ் (53 வயது) என்னும் 6 பிள்ளைகளின் தந்தை ஆவார். பேக்கரித் தொழிலாளியான இவர், தேங்காய் வியாபாரத்துக்காகசந்தைக்கு வந்திருந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

காயமடைந்தவர்கள் சாவகச்சேரி, மந்திகை ஆஸ்பத்திரிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சைக்கிள் பாதுகாப்பு நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பல சைக்கிள்கள் சேதமடைந்தன. [ஓ-117]

## நேற்றும் கைது

மதுரையில் பெரியார்நகர், உச்சப்பட்டி, கூடல்நகர் ஆகிய இடங்களில் உள்ள அகதி முகாம்களில் 52 இலங்கைத் தமிழ்ப் போராளிகள் நேற்றுக்கைது செய்யப்பட்டனர்.

இந்தப் போராளிகள் பல குழுக்களைச் சேர்ந்தவர்கள் என்று பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

புதுக்கோட்டை மாவட்டத்திலும் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு 12 இலங்கைத் தமிழ்ப் போராளிகள் கைது செய்யப்பட்டனர். [ஓ-எ]

## முல்லைத்தீவு கடலில் 5 படகுகள் மீது விமானக் குண்டு வீச்சு! பலர் பலி!!

கொழும்பு, டிச. 20

முல்லைதீவுக் கடற்பகுதியில் ஐந்து படகுகள் மீது போர் விமானங்கள் குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தியதாக ஏஜென்சிச் செய்திகள் தெரிவித்தன.

குண்டு வீச்சில் படகுகள் சேதமடைந்தன என்றும் —

உயிரிழந்த பொதுமக்களின் எண்ணிக்கை தெரியவரவில்லை என்றும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டது.

குண்டு வீச்சில் அதிக எண்ணிக்கையான பொதுமக்கள் உயிரிழந்திருக்கலாம் என்று சுயாதீனச் செய்திகள் தெரிவித்தன. [ஓ-எ]

## சந்திரசேகர் தமிழகம் வருகிறார்

சென்னை, டிச.20

இந்தியப் பிரதமர் திரு. சந்திரசேகர் எதிர்வரும் 10 ஆம் திகதி சென்னைக்கு விஜயம் செய்யவுள்ளார்,

சென்னையில் ஆரம்பமாக இருக்கும் தமிழ்த் திரைப்பட விழாவில் கலந்து கொள்ள வருமாறு தமிழக முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி [illegible] ஏற்றே சந்திரசேகர் இங்கு வருகிறார் என்று தெரிவிக்கப்பட்டது.

### தொண்டர் ஆசிரியர் நியமனம்:

## நேர்முகப் பரீட்சை மீண்டும் நிறுத்தப்பட்டது

யாழ்ப்பாணம், டிச. 20

தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கும் விவகாரம் சகுனம் பிழைத்ததுபோல இழுபட்டுக் கொண்டே போகிறது!

கொழும்பில் இருந்து வந்த உத்தரவை அடுத்து நேற்று ஆரம்பிக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை மறு அறிவித்தல் வரை பின்போடப்பட்டுள்ளது.

தொண்டர் ஆசிரியர்களை நிரந்தரமாக்கும் விடயம் நீண்டகாலமாகத் தாமதிக்கப்பட்டு வந்தது. இறுதியில் கடந்த மாதமே பட்டியல் கொழும்பில் இருந்து வந்தது.

நேர்முகப் பரீட்சை வைத்தே நியமனம் வழங்கப்படவேண்டும் எனப் பணிக்கப்பட்டிருந்ததால் அதற்கான திகதி நிர்ணயிக்கப்பட்டவேளை, போட்டிப் பரீட்சை நடத்தவேண்டும்

[2 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். மாவட்டத்தில் மட்டும்
# 800 ஆசிரியர் இளைப்பாறுவர்

யாழ்ப்பாணம், டிச. 20
யாழ். மாவட்டத்தில் மட்டும் புதிய இளைப்பாறும் திட்டத்தின் கீழ் அதிபர்கள் உட்பட 800 ஆசிரியர்கள் ஓய்வுபெற உள்ளனர்.

பிராந்தியக் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் இத்தகவலைத் தெரிவித்தார்.

இது குறித்து கல்விப் பணிப்பாளர் மேலும் கூறியதாவது:-

800 ஆசிரியர்கள் இளைப்பாற இருப்பதால் யாழ். மாவட்டத்தில் ஆசிரியர் பற்றாக்குறை ஏற்படாது.

ஏனெனில் தற்பொழுது கடமையாற்றி வரும் சுமார் 800 தொண்டர் ஆசிரியர்கள் விரைவில் பாடசாலைகளுக்கு நிரந்தரமாக நியமனமாகவுள்ளனர்.

ஏற்கனவே பயிலுநர் ஆசிரியர்களாக ஆயிரத்து 34 பேர் நியமனம் பெற்றுள்ளனர், இதனை விட 300 ஆசிரியர்கள் வெளி மாவட்டங்களில் இருந்து இங்கு இடமாற்றம் பெற்று வரவுள்ளனர்- என்றார். (ஒ-3)

## மருத்துவபீடப் பரீட்சைகள் ஜன. 18, 21 ஆம் திகதிகளில்

யாழ்ப்பாணம், டிச. 20
யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட பரீட்சைகள் அடுத்த மாதம் 18 ஆம், 21 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்திலும், கொழும்பிலும் ஒரே நேரத்தில் நடைபெற இருக்கின்றன.

யாழ். மருத்துவ பீடத்தின் எம். பி. பி. எஸ். 3 ஆம் ஆண்டு (பகுதி 2), எம். பி. பி; எஸ். 2 ஆம் ஆண்டு (மீள்) பரீட்சைகள் இன்றும், 27 ஆம் திகதியும், நடைபெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டு பின்னர் அவை ஒத்திவைக்கப் பட்டிருந்தது தெரிந்ததே.

பல்கலைக்கழக மான்ய ஆணைக்குழுவால் சிபார்சு செய்யப்பட்ட 15 பேருக்கு கொழும்பிலும், ஏனையோருக்கு யாழ்ப்பாணத்திலும் இந்தப் பரீட்சைகள் நடைபெற இருக்கின்றன. (உ-3)

## அரியாலையில் மண் மீட்பு நிதி

யாழ்ப்பாணம், டிச. 20
அரியாலை பிரதேசத்தில் - நல்லூர் உ.அ. அதிபர்பிரிவுக்குட்பட்ட பகுதியில் இதுவரை மண்மீட்பு நிதியைச் செலுத்தாதவர்கள் -

இன்று காலை 9 மணி முதல் 11.30 மணி வரை யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் மீட்புநிதியைச் செலுத்தலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. [ஒ]

## ஆசிரிய கலாசாலை இறுதிப் பரீட்சை

யாழ்ப்பாணம், டிச. 20
பலாலி, கோப்பாய் ஆசிரிய பயிற்சி கலாசாலைகளின் மாணவர்களுக்கான இறுதியாண்டுப் பரீட்சைகள் எதிர்வரும் 26 ஆம் திகதி நடைபெற இருக்கின்றன.

கல்வி அமைச்சு நேற்று இது சம்பந்தமாக யாழ். கல்விப்பணிப்பாளர் திரு. இ சுந்தரலிங்கத்துக்கு அறிவித்தது. [ஒ-3]

## இறந்த பிரிகேடியருக்கு பதவி உயர்வு!

கொழும்பு, டிச. 20
கடந்த செவ்வாய்க்கிழமை பன்மதவாச்சி திலக்கண்ணி வெடித்தாக்குதலில் கொல்லப்பட்ட பிரிகேடியர் லக்ஷ்மன் விஜேரத்தினா நேற்று மேஜர் ஜெனரலாக பதவி உயர்த்தப்பட்டார்

இறந்தபின்னர் அவருக்கு இந்தப் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. [ஒ-எ]

## தாந்தாமலைப் பகுதியில் 5தமிழர் சுட்டுக்கொலை

யாழ்ப்பாணம், டிச. 20
கடந்த திங்களன்று மட்டக்களப்பு மாவட்டம், தாந்தாமலைப் பகுதியில் அந்தோனியார் குளம் என்னுமிடத்தில் கால்நடைகளைப் பராமரித்துக்கொண்டிருந்த ஐந்து தமிழ்ப் பொதுமக்கள் இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

கொச்சிக்கொடிப் பகுதியைச் சேர்ந்த வண்டையா மாசிலாமணி (வயது 21), கிருஷ்ணபிள்ளை நவரத்தினம் (வயது 20), நடராசா திருச்செல்வம் (வயது 18), 38 ஆம் கொலனியைச் சேர்ந்த முத்தையா உதயகுமார் (வயது 20), பட்டிப்பாளையப் பகுதியைச் சேர்ந்த சின்னையா அரியநாயகம் (வயது 18) ஆகியோரே உயிரிழந்தவர்களாவர். [உ-எ]

## 2 வருடப் பூர்த்தி

கொழும்பு, டிச. 20
திரு. பிரேமதாசா ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டு இரண்டு வருடப் பூர்த்தியை [illegible] தென் இலங்கையில் நேற்றுப் பல சமய நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

## 50 பேர் பலி!

டாக்கா, டிச. 20
பங்களாதேஷில் வீசிய சூறாவளியில் 50 பேர் உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

## மட்டக்களப்பில் இரு போராளிகள் வீரமரணம்

யாழ்ப்பாணம், டிச. 20
மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெற்ற வெவ்வேறு விபத்துச் சம்பவங்களில் இரண்டு விடுதலைப் புலிகள் போராளிகள் வீரமரணமடைந்தனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை புல்லுமலையைச் சேர்ந்த வசந்தும்—

கடந்த செவ்வாய்க்கிழமை குருக்கள் மடத்தைச் சேர்ந்த இரண்டாவது லெப்டினன்ட் கோல்டாவும் (கந்தசாமி சிவப்பிரகாசம் - குருக்கள் மடம்) வீரமரணமடைந்தனர். (உ-எ)

## நேர்முகப் பரீட்சை...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

என்று கல்விஅமைச்சுக் கூறியதாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் அறிவித்தது.

அதனால் ஒரு குழப்பநிலை தோன்றியது. பின்னர் கொழும்புடன் தொடர்பு கொண்டு நேற்றுமுதல் ஒரு வாரகாலத்திற்கு நேர்முகப் பரீட்சைக்குத் திகதி நிர்ணயிக்கப்பட்டது.

அதன்பிரகாரம் இந்து மகளிர் கல்லூரியில் நேற்று 60 பேருக்கு நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்டது. கொழும்பிலிருந்து திடீரென வந்த உத்தரவை அடுத்து நேர்முகப் பரீட்சைமறு அறிவித்தல்வரை பின்போடப்பட்டுள்ளது,

போட்டிப் பரீட்சைஒன்றை நடத்துவதற்காகவே நேர்முகப் பரீட்சைகள் பின்போடப்பட்டிருக்கலாம் என்றும், தொண்டர் ஆசிரியர்கள் தொடர்ந்து தமது பாடசாலைகளில் கடமையாற்றலாம் என்றும் பிராந்திய கல்விப்பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் தெரிவித்தார். [அ-3]

## முன்னாலி போன...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

சர்ட் விஜேசேகரா ஆகியோர் சென்ற ஜீப் கண்ணிவெடிக்கு மேலாகக் கடந்த போது அது வெடித்தது. ஜீப் அதில் சிக்கி தூக்கி எறியப்பட்டு சின்னாபின்னமானது.

— ஏ. எவ். பி. செய்தி ஏஜென்ஸி பன்மதவாச்சி தாக்குதல் சம்பவம் குறித்து இவ்வாறு தகவல் வெளியிட்டது. [உ-எ]

## தமிழ்ப் போராளிகள் கைது வெறும் கண்துடைப்பாம்

சென்னை டிச. 20
இலங்கைத் தமிழ் போராளிகளைக் கைது செய்யும் தமிழக அரசின் நடவடிக்கை வெறும் கண்துடைப்பே.

இப்படி தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளைக் கைதுசெய்யப்போவது, அவர்களுக்கு முன்னமேயே தெரிவிக்கப்பட்டுவிடுகிறது என்றும் இராமமூர்த்தி சொன்னார்.

எல்லைக் காவல் படையை தமிழகம் அனுப்பும்படி முதலமைச்சர் மத்திய அரசைக் கோரியிருப்பது, மாநிலத்தில் சட்டம், ஒழுங்கு சீர்குலைந்திருப்பதை ஒப்புக்கொண்டாகிறது என்றும் அவர் சொன்னார். [ஒ-எ]

## சீனப் பிரதமர் லீ பெங் நேற்று நாடு திரும்பினார்

### பொருளாதார ஒப்பந்தம் கைச்சாத்து

கொழும்பு, டிச. 20
இலங்கை — சீன பொருளாதார ஒப்பந்தம் ஒன்று நேற்றுக் காலை கொழும்பில் கைச்சாத்தானது.

இலங்கை சார்பில் வெளிவிவகார துணை அமைச்சர் ஜோன் அமரதுங்காவும் சீனா சார்பில் அந்த நாட்டின் வர்த்தக அமைச்சரும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

மூன்று நாள் விஜயத்தை முடித்துக்கொண்டு சீனப் பிரதமர் லீ பெங் தாயகம் திரும்பினார்.

சீனப் பிரதமருக்கு, அவர் தங்கியிருந்த ஹோட்டலுக்குச் சென்று ஜனாதிபதி பிரேமதாஸா பிரியாவிடை அளித்தார். [ஒ-எ]

## குழந்தைகளுக்கு நோய்த் தடுப்பூசி

யாழ்ப்பாணம், டிச. 20
5 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு தொற்றுநோய்த் தடுப்பூசி ஏற்றும் பணி நேற்று மீண்டும் ஆரம்பமானது

கடந்த ஜூன் மாதத்தில் யுத்தம் தொடங்கிய பின்னர் போதியளவு தடுப்பூசி மருந்து வராமையால் நீண்ட காலம் அந்தப் பணி நிறுத்தப்பட்டிருந்தது.

இம்முறை கொழும்பிலிருந்து வந்த மருந்து வகைகளில் தடுப்பூசி மருந்தும் அடங்கியிருந்தது.

ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த ஏனைய நாட்களில், யாழ். போதனா ஆஸ்பத்திரியில் குழந்தைகளுக்கான தடுப்பூசி ஏற்றப்படும் என்று ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன. [அ-15]

## கட்டுவனில்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தலை நடத்தியது.

நேற்றைய மோதலில் இராணுவத்தினருக்குப் பலத்த சேதம் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

படையினரை விரட்டியடிக்கும் முயற்சியில் களப்பலியான பெண் போராளிகள் விவரம் வருமாறு:

★ கப்டன் சுந்தரி [உருத்திராபதி உதயலட்சுமி- நெடியகாடு, வல்வெட்டித்துறை]

★ தவஜீவனா [கணபதிப்பிள்ளை சாந்தினி- மல்லாகம்]

★ ஆனதி [ஐயாத்துரை கிருஷ்ணலீலா- முள்ளியவளை]

★ கேரளா (ஜெகநாதன் ஜெகதீஸ்வரி- குச்சவெளி]

★ ஜெ லீலா

★ சுகந்தா

★ கேதீகா

★ நிரஞ்சனா

நேற்றைய மோதலில் வீரமரணமடைந்த கப்டன் சுந்தரி, ஏற்கனவே தம்மண்ணுக்காக உயிர்த்தியாகம் செய்த கப்டன் வாசு, மேஜர் ஜேம்ஸ் ஆகியோரின் சகோதரி என்பதும் குறிப்பிடத்தக்கது. (உ-எ-15)

## ஒருநாள் சம்பளம் வழங்க முடிவு

யாழ்ப்பாணம், டிச. 20
தென் தமிழீழ மக்களின் துயர் துடைப்பு நிதிக்கு பல்கலைக் கழக ஆசிரியர்கள் தமது ஒரு நாள் சம்பளத்தை வழங்குவர்.

இது தொடர்பான தீர்மானம் யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் [illegible] நிறை[illegible]. [இ]


## அரசாங்க கேள்வி அறிவித்தல்

### சுகாதாரத் திணைக்களம் யாழ்ப்பாணம் பெரும்பாகம்

20-12-90ஆம் திகதி மு. ப. 10மணிக்கு மூடப்பட இருந்த உணவு வழங்கல் சம்பந்தமான கேள்வி அறிவித்தல் 10-01-91 மு. ப. 10 மணிக்கு மூடுவதற்கு பின்போடப்பட்டுள்ளது. 1990ஆம் ஆண்டுக்கான பெறுமதியைப் பற்றிய சான்றுரைப் படிவம் சமர்ப்பிப்பவர்களுக்கு மட்டுமே கேள்விப்படிவங்கள் வழங்கப் படும்.

டாக்டர் ந. கனகசபை,
சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

சு. சே. பி. பணிமனை,
யாழ்ப்பாணம்.
18-12-1990. [சி-5546]

### சாவகச்சேரி நகராட்சி மன்றம்
### 1991 ஆம் ஆண்டுக்கான கேள்வி அறிவித்தல்

மேற்படி கேள்வி அறிவித்தல் சம்பந்தமான 07-12-90 இல் வெளி வந்த விளம்பரப் பிரகாரம் குறிப்பிட்ட கேள்வியின் 1 ஆம் 2 ஆம் விடயங்களுக்கான திகதிகள் நீடிக்கப்பட்டுள்ளன. இதன்படி கேள்விப் பத்திரங்கள் 24-12-90 நண்பகல் 12 30 மணிவரையும் வழங்கப்படும். பூர்த்தி செய்யப்பட்ட கேள்விகள் 26-12-90 பி. ப. 4.15 வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

த. நவரத்தினராசா,
செயலாளர்,
நகரசபை, சாவகச்சேரி.

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி. 17-12-90 [சி-5547]


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

### செல்வி தனேஸ்வரி சண்முகநாதன்

[பலாலி ஆசிரிய கலாசாலை மாணவி]

மலர்வு: 18-06-1967
உதிர்வு: 19-11-1990

நித்தம் சிரித்திருந்த புத்தம் புதுமலரே
சத்தம் ஏதுமின்றி சடுதியாய் மறைந்தாயே
பத்தரை மாற்றுப் பண்பின் சிகரமே
நித்தமுன் நினைவை நெஞ்சில் சுமப்போமே!

ஆத்ம சாந்தியை நாடும்
கலாசாலை நண்பர்கள்.

(15180)

## மரண அறிவித்தல்கள்

### வேலுப்பிள்ளை சுப்பிரமணியம் திருச்செல்வம்

[Retired Superintending Marine Engineer, Port Commision, Colombo.]

வறுத்தலைவிளான் தெல்லிப்பழையைச் சேர்ந்த திரு. V. S. திருச்செல்வம் காலமானார். இவர் குகஞானவதியின் அன்புக்கணவரும், மனமோகன் [பொறியியலாளர், கனடா], அருந்ததி [Samuel And Sons, Colombo] ஆகியோரின் அன்புத்தந்தையும், திருமதி சசிலேகா மனமோகனின் அன்பு மாமனாரும், காயத்திரியின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 19-12-90 அன்று 'பாக்கியவிலா', கோவில் வீதி, கொக்குவிலில் நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகிறேன்.

தகவல்:
திருமதி குகஞானவதி திருச்செல்வம்
மனைவி.

''பாக்கிய விலா''
கோவில் வீதி.
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில். [15173]

### திருமதி தங்கம்மா தியாகராஜா

கொட்டடியைப் பிறப்பிடமாகவும் அராலி கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட காலஞ்சென்ற தியாகராஜா [P.W.D, Overseer]வின் அன்பு மனைவியும், தியாகலிங்கம், சிறிகரன், சிறிகாந்தன், சாந்தகுமார், சிவகாமசுந்தரி, சிவசோதிசுந்தரி, சிவஞானசுந்தரி ஆகியோரின் அன்புத் தாயாருமான தங்கம்மா தியாகராஜா நேற்றுக் காலமானார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று காலை 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்;

தகவல்:
M. பாலசிங்கம்

அராலி கிழக்கு,
அராலி. [14864]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 20-12-1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### கொழும்பில் லீ பெங்!

சீனப் பிரதமர் லீ பெங்கின் கொழும்பு விஜயம் சர்வதேசக் கவனத்தை ஈர்க்கும் ஒன்றாக அமைந்துவிட்டது.

1987 ஜூலையில் அப்போதைய இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி வந்த பின்னர் ஆசியாவின் 'பெரிய' தலைவர் ஒருவர் இப்போதுதான் இலங்கை வந்திருக்கிறார். லீ பெங்கின் கொழும்பு விஜயமும் அதன் பெறுபேறுகளும் தென்கிழக்காசிய நாடுகளின் வெளிநாட்டு உறவுகளிலும், கொள்கைகளிலும் ஒரு சிக்கலான உருவத்தைத் தோற்றுவித்துள்ளது. மிகக் குறிப்பாக இந்தியாவின் நிலைமை பரிதாபத்துக்கு உரியதாக்கியுள்ளது.

இலங்கை விவகாரத்தில் இந்தியாவின் முந்திய வெளிநாட்டுக்கொள்கையும் உத்திகளும் தோல்வி கண்டன. இந்தியா எதிரியை நண்பனாக்க முயன்று தோல்வி கண்டுவிட்டது. அந்தத் தோல்வியை மறந்து மீண்டும் கொழும்பை தனது நண்பனாக்குவதற்கு, புதிய உத்திகளைக் கையாண்டு வருகிறது.

ஆனால் இம்முறையும் இந்தியா தோல்வி அடையும் என்பதைச் சீனப் பிரதமரின் கொழும்பு விஜயம் எடுத்துக் காட்டியுள்ளது. இந்தியா தனது இலங்கை தொடர்பான உத்திகளை எப்படித்தான் மாற்றிக் கொண்டாலும், கொழும்புடன் நெருக்க முற வேண்டும் என்று விரும்பினாலும் இலங்கை அதற்குத் தயாரில்லை.

இலங்கையின் உள் விவகாரத்தில் வெளிநாடு தலையீடு செய்வதை சீனா எதிர்க்கும் என்று லீ பெங் கர்ச்சித்திருக்கிறார். இது இந்தியாவுக்கு எதிரான உறுமல். கடந்த ஆறுமாதப் போருக்கு கொழும்புக்கு விரைந்து இராணுவத் தளபாடங்களை மலிவு விலையில் விற்று உதவியது சீனா. மேலும் அந்த உதவி தொடரும் என லீபெங் உறுதி அளித்திருக்கிறார். பெருந்தொகைப் பணத்தை வட்டியில்லாக் கடனாக வழங்கியிருக்கிறார். கிடைத்தவற்றுக்கும், கிடைக்கப் போகின்றவற்றுக்கும் பிரேமதாசா வாய் இனிக்க நன்றி கூறியிருக்கிறார்.

இதற்குப் பிறகும் சீன, பாகிஸ்தானிய உறவுகளை முறித்துக் கொண்டு கொழும்பு தனது நண்பனாக மாறும், அல்லது அவ்வாறு அதனை மாற்ற முடியும் என்று இந்தியா நினைக்கிறதா?

அது வீண் நினைவே ஆகும்.

எனவே இலங்கை விவகாரத்தில் தனக்கு நண்பன் யார், எதிரி யார் என்பதனை சரியாக இனங்காண்பதற்கு இந்தியா இனியும் தாமதித்தால் அது பெரும் திக்குமுக்காட வேண்டியிருக்கும்.

இலங்கை அரசாங்கம் மீதான இந்தியாவின் செல்வாக்கு தீவிரமாகக் குறைந்து வருவதையே சீனப்பிரதமரின் கொழும்பு விஜயம் காட்டுகின்றது.

சீனாவுடன் நெருங்கி உறவாடுவதால் இலங்கை எதனையும் பெரிதாகக் கறந்து விட முடியாது ஏனெனில் சீனாவின் பொருளாதாரம் மிகவும் தாழ்ந்து போயுள்ளது. அதனால் சீனாவும் சுயநலத்தோடு தான் இலங்கை போன்ற நாடுகளை "கைக்குள்" போட்டுக்கொள்ள முயற்சிக்கிறது.

## கனடாவில் 'யாழ் கோட்டை தாக்குதல்!'

யாழ்ப்பாணம், டிச. 20

கனடாவில் வெளிவரும் "உலகத் தமிழர்" எனும் பத்திரிகையில் யாழ். கோட்டை மீது புலிகள் நடத்திய வெற்றிகர தாக்குதல் குறித்து விரிவான கட்டுரை ஒன்று வெளியாகியுள்ளது.

இந்தப் பத்திரிகை தமிழர்கள் வாழும் நாடுகள் எங்கும் விற்பனையாகிறது. (ஓ-6)

## வர்த்தமானியில் ஓய்வுச் சலுகை

அரச, கூட்டுத்தாபன ஊழியர்கள் சலுகை அடிப்படையில் ஓய்வு பெறுவது தொடர்பான பிரமாணங்கள் அக்டோபர் 30ஆம் திகதி வெளியான அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

இந்த வர்த்தமானி 17ஆம் திகதி தான் யாழ். செயலகத்துக்குக்கிடைத்தது. [இ-5]

# யாழ். கோட்டப் பாடசாலைகளில் பெப்ரவரியில் மாணவர் அனுமதி

யாழ்ப்பாணம், டிச. 20

யாழ். கோட்டப் பாடசாலைகளுக்கு - அடுத்த வருட மாணவர் அனுமதி- பெப்ரவரி மாதத்தில் இருந்தே மேற்கொள்ளவேண்டும்.

யாழ். கோட்டத்தைச் சேர்ந்த கொத்தணி அதிபர்கள், தேசிய, தனியார் பாடசாலை அதிபர்கள் கலந்து கொண்ட கூட்டம் உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. சி. தியாகராசா தலைமையில் தினகளன்று நடைபெற்றபோது மேற்கண்ட முடிவு எடுக்கப்பட்டது.

அங்கு எடுக்கப்பட்ட ஏனைய இல முடிவுகள் வருமாறு:-

★ வகுப்பேற்றப் பரீட்சைகள் அடுத்த வருடம் ஜனவரி 21 ஆம் திகதிக்கும் பெப்ரவரி முதலாம் திகதிக்கும் இடையில் நடத்தப்படவேண்டும்.

★ ஆசிரியர்களின் வரவை கொத்தணி அதிபர்கள் மேற்பார்வை செய்யவேண்டும்.

★ மாணவர்களின் பாடநேர அட்டவணை, பாடசாலை வரவு - செலவுத்திட்டம், வருடாந்த கல்வி அமுலாக்கத்திட்டம் ஆகியவற்றை பெப்ரவரியில்இருந்து தயாரிக்கவேண்டும். (ஓ-3)

## பாதுகாப்பான இடங்களில் பரீட்சை நிலையங்கள்

### கல்விப் பணிப்பாளர் கூறுகிறார்

யாழ்ப்பாணம், டிச. 20

அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் நடத்தப்படவுள்ள விசேஷ ஜீ. சி. ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் பாதுகாப்புக் கருதி பரீட்சை நிலையங்கள் யாவும் யாழ். நகரில் பாதுகாப்பான இடங்களில் உள்ள பாடசாலைகளில் அமைக்கப்படும்.

—இவ்வாறு வடபிராந்திய கல்விப்பணிப்பாளர் இ. சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

வடமாகாணத்தில் இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இடம்பெயர்ந்து யாழ்ப்பாணத்தில்வேறு பாடசாலைகளில் கல்வி பயிலும் உயர்தர மாணவர்களுக்கு விசேஷ பரீட்சைநிலையங்கள் அமைக்கப்படும் எனவும் — தூர இடங்களில் உள்ள மாணவர்களுக்கு போக்குவரத்து வசதி இல்லாத காரணத்தால் பரீட்சை நடைபெறும் பாடசாலைகளில் உள்ள விடுதிகளில் அவர்கள் தங்க ஏற்பாடுகள் செய்யப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை—கடந்த ஆகஸ்டில் நடந்த ஜீ.சி.ஈ. உயர்தரப் பரீட்சையில் வேறு இடங்களுக்குச் சென்று அங்கு தோற்றிய மாணவர்கள் இரண்டாவது தடவையாக இந்த விசேஷ பரீட்சையில் தோற்றக் கூடாது என்றும் அவ்வாறு தோற்றுவது கண்டு பிடிக்கப்பட்டால் அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கல்விப் பணிப்பாளர் எச்சரித்தார். [இ-5]

## நகரில் திருடிய சைக்கிளை கொக்குவிலில் விற்க முயன்றவர்

யாழ்ப்பாணம், டிச. 20

திருடிய சைக்கிளை விற்பதற்காக விலைபேசிக்கொண்டிருந்த ஒருவர் கையும் மெய்யுமாகப் பிடிபட்டார்.

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

யாழ்.போதனா ஆஸ்பத்திரிக்கு முன்பாக அமைக்கப்பட்டிருக்கும் சைக்கிள் நிலையத்திலிருந்து சமீபத்தில் சைக்கிள் ஒன்று திருட்டுப் போயிருந்தது.

சைக்கிளைத் திருடியவர் கொக்குவில் பகுதியில் அதனை விற்பதற்காக விலை பேசிக்கொண்டிருந்த சமயம் யாழ். போதனா ஆஸ்பத்திரி சைக்கிள் பாதுகாப்பு நிலையத்தவரின் கையில் வகையாகச் சிக்கிக்கொண்டார்.

கொக்குவிலில் இருந்து சைக்கிளைத் தூக்கி தோளில் வைத்தபடி திருடன் ஆஸ்பத்திரிவரை ஊர்வலமாக அழைத்து வரப்பட்டு பின் விடுதலைப்புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டார்.

பிடிபட்டவர் கிளிநொச்சியைச் சேர்ந்த 25வயது இளைஞர் ஆவார். (இ-15)

## சைக்கிளில் விறகு வியாபாரம்

சாவகச்சேரி, டிச. 20

விறகுக்கு ஏற்பட்டுள்ள கிராக்கி காரணமாக சாவகச்சேரிப் பகுதியில் இருந்து யாழ். நகரப்பகுதிக்கு சைக்கிளில் விறகு கொண்டு செல்வோர் எண்ணிக்கை தினமும் அதிகரித்து வருகிறது.

மேலும் தேங்காய் மட்டைகளும் சைக்கிள்களில் எடுத்துச் செல்லப்படுகின்றன.

சரசாலை, வரணி, கொடிகாமம், பளைப் பகுதிகளில் இருந்தே விறகுகள் பெரும் அளவு எடுத்துச் செல்லப்படுகின்றன. (இ - 3)

## எழுத்து மூலப்பரீட்சை மூலம் பட்டதாரி ஆசிரியர் நியமனம்

கொழும்பு, டிச. 20

பட்டதாரி ஆசிரிய நியமனம் கோரி விண்ணப்பிப்போர் இனி எழுத்துப் பரீட்சை ஒன்றுக்குத் தோற்றும் படியும் கோரப்படுவர்.

கல்வி மற்றும் உயர்கல்வி அமைச்சு இப்படி முடிவு செய்திருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதுவரை காலமும் நேர்முகப்பரீட்சை ஒன்றுக்கு மட்டுமே பட்டதாரி ஆசிரிய விண்ணப்பதாரர்கள் தெரிவு செய்யப்பட்டு வந்தனர்.

இனிமேல் நேர்முகப் பரீட்சையுடன் எழுத்து மூலமான பரீட்சையை அவர்கள் எடுக்க வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது. (இ-எ)

## 12 வார கால நிவாரண உணவு மன்னாரில் விநியோகம்

யாழ்ப்பாணம், டிச. 20

மன்னார்நகரில் உள்ள ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த 4 ஆயிரத்து 800 பேருக்கு 12 வாரத்துக்கு உலர் உணவு நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது.

மன்னார் பட்டின உதவி அரசாங்க அதிபர் திரு. ரி. இராமலிங்கம் இவ்வாறு உதயனுக்குத் தெரிவித்தார்.

பேசாலை அகதி முகாமில் 400 குடும்பங்களைச் சேர்ந்த இரண்டாயிரம் பேரும் -

சனி விலேஜ் அகதி முகாமில் 150 குடும்பங்களைச் சேர்ந்த 900 பேரும் -

நகரப் பகுதியில் உள்ள தேவாலயங்களில் 450 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 900 பேரும்- அகதிகளாக உள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார். [உ-3]

# யாழ். நகரின் நிலைமை கண்டதும் அதிர்ச்சி அடைந்து போனேன்

## மார்ச் மாதத்தின் பின் மீண்டும் வந்த சுவிஸ் பிரதிநிதி கருத்து

யாழ்ப்பாணம், டிச. 20

தமிழ்ப் பகுதிகள் பற்றிய செய்திகள் எதனையும் சுவிஸில் அறிய முடிவதில்லை. கடந்த மார்ச் மாதத்தில் நான் பார்த்த யாழ். நகரின் இன்றைய நிலையை கண்டதும் அதிர்ச்சி அடைந்தேன்.

இவ்வாறு தெரிவித்தார் திரு. றோநாதோ.

சுவிஸ் சர்வதேச ஒருமைப்பாட்டுக் கழகத்தைச் சேர்ந்த இவர் கடந்த வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் வந்தார்.

இதற்கு முன் கடந்த மார்ச் மாதத்திலும் இவர் யாழ்ப்பாணம் வந்திருந்தார்,

கடந்தமார்ச்சில் வந்திருந்த போது யாழ்.நகரில் குருநகர்ப் பகுதியில் சுவிஸ் அரசின் உதவியுடன் பல புனரமைப்பு வேலைகளை செய்யத் திட்டமிட்டிருந்தார்.

குருநகர்ப் பகுதியில் மக்களுக்கு மலசலகூட வசதிகளை அமைத்துக்கொடுக்கும் திட்டங்களைத் தயாரித்துக் கொண்டு கடந்த ஏப்ரலில் சுவிஸ் திரும்பியவர் யுத்தம் தொடங்கியதால் மீண்டும் இங்கு வருவதில் தாமதம் ஏற்பட்டது.

திரு. றோநாதோ மேலும் தெரிவித்ததாவது:-

நான் புனரமைப்பு வேலைகள் செய்யத் திட்டமிட்டிருந்த குருநகர்ப் பகுதியைச் சென்று பார்த்தேன்.

அப்பகுதி மிக மோசமாக சேதமடைந்து காணப்படுகிறது.

நகங்கள் அங்கு மலசலகூடங்களை அமைக்கவே திட்டமிட்டிருந்தோம். ஆனால் குருநகர் அழிந்து கிடப்பதால் அத்திட்டத்தைப் பின்போட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

தற்போது சாவகச்சேரி பகுதியில் நான்கு கிராமசேவை அலுவலர் பிரிவுகளில் சில தேவைகள் குறித்து ஆய்வு செய்து வருகிறேன்.

இப்படி அவர் கூறினார்.

இன்னும் சில தினங்களில் நான் கொழும்பு செல்வேன். யாழ்ப்பாணத்தின் உண்மை நிலையை, அழிவுகளை, அறிக்கைகளாக்கி எனது நாட்டில் (சுவிஸில்) வெளியிடுவேன் என்றும் அவர் கூறினார். (இ-5)

## உலகச் செய்திகள்

### இலங்கை அகதிகளுக்கு இந்தியா உதவி

புதுடில்லி, டிச 20

இலங்கையில் இடம்பெயர்ந்து சென்ற மக்களின் மறுவாழ்வுக்கென ஆறு லட்சத்து 85 ஆயிரம் டொலர்கள் மதிப்புக்கு பொருள் உதவியும் 1 லட்சம் டொலர் பண உதவியும் வழங்க இருப்பதாக இந்தியா அறிவித்தது.

அகதிகளுக்கான ஐ. நா. உயர் ஸ்தானிகரிடம் இந்திய அரசு இவ்வாறு தெரிவித்தது என்று புதுடில்லியில் அரசு அதிகாரி ஒருவர் செய்தியாளரிடம் தெரிவித்தார். [ரு-எ]

### பாக். பிரதமருடன் சந்திரசேகர் அடிக்கடி தொடர்பு!

புதுடில்லி, டிச 20

இந்தியப் பிரதமர் சந்திரசேகரும் பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப்பும் அவசரமாகத் தொடர்பு கொள்ள ஏதுவாக நேரடித் தொலைபேசி [Hot line] வசதி செய்யப்பட்டுள்ளது,

இத்தகவலை வெளியிட்ட பிரதமர் சந்திரசேகர், இந்த வசதியைப் பயன்படுத்தி இரண்டு முறை பாகிஸ்தான் பிரதமருடன் பேசியதாகவும் தெரிவித்தார். [ஒ-எ]

(இ-6)

### ஈராக் பூரணமாக வாபஸாக வேண்டும்

குவைத் நாட்டின் ஒவ்வொரு சதுர அங்குலத்திலும் இருந்தும் ஈராக் படைகள் பூரணமாக வாபஸாக வேண்டும். இதில் கருத்து வேறுபாட்டுக்கு இடமே இல்லை.

இப்படி அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் தெரிவித்தார்.

வளைகுடாவில் ஈராக்குக்கு எதிரான 'பாலைவனப் பாதுகாப்பு' [Operation Desert Shield] நடவடிக்கையில் அமெரிக்காவுக்கு நேரடி உதவிகளை வழங்கும் 30 நாடுகளின் தூதர்களை அழைத்து, அவர்களுடன் அதிபர் புஷ் உரையாடினார். அப்போதே முன்கண்ட அறிவிப்பை அவர் வெளியிட்டார். [இ-எ]

## நாளைமுதல் 3 தினங்களுக்கு மாணவர் எழுச்சி தினம்

எதிர்வரும் 21ஆம் திகதி முதல் 23ஆம் திகதி வரையான 3 தினங்களையும் விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கம் மாணவர் எழுச்சி தினமாக கொண்டாட உள்ளது.

மாணவர் எழுச்சி தினத்தை முன்னிட்டு மாணவர் இயக்கம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

எமது மண்ணை மீட்பதற்காகவும், அந்நியப் படையின் தாக்குதல்களிலிருந்து எமது மக்களைப் பாதுகாக்கவும் மரணித்த மாவீரர் வரிசையில் மாணவர் அமைப்பைச் சேர்ந்தவர்களின் பங்களிப்பை நீங்கள் மறந்திருக்க மாட்டீர்கள்.

இந்த மாணவர்கள் வெறும் கல்வி கற்பதை மட்டுமன்றி, மறத் தமிழர் மரபிலே வந்தவர்கள் தாம் என்பதை எடுத்துக் காட்டும் வகையில், தமிழீழ மக்களின் விடிவுக்காகப் போராடி உரிமைகளை வென்றெடுக்க முன்னின்றுழைத்த உத்தமர்கள்.

அவர்களில் பலர் பாடசாலை முதல் பல்கலைக் கழகம் வரை திறமையுடன் பயின்று போராட்டத்தில் இணைந்து வீரமரணத்தைத் தழுவிக் கொண்டவர்கள்.

அந்த வகையில் அந்நியப் படையுடனான மோதலில் வீர மரணமடைந்த மேஜர் முரளி, கப்டன் சாந்தி, ரஞ்சன், அமுதன், நிரா, லெப். தர்சினி, சதா, மிகித்தா, நிதி, நிர்மலா ஆகியோரையும் —

மேலும் அவர்களின் வழியில் நடைபயின்ற மாணவர்களையும், எழுச்சி நாளான டிசம்பர் 23ஆம் திகதி அன்று எமது மனங்களில் நிலை நிறுத்தி அஞ்சலி செய்கிறோம்.

இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நத்தார் புதுவருட வாழ்த்து மடல்களை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். (வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு) ''மண்டேலா ரேடர்'' இல. 156 A, பருத்தித்துறை வீதி, நல்லூர். 'அரஸ் ஜவுளியகம்' 146 நவீன சந்தை, யாழ்ப்பாணம். (15000)

### கம்பியூட்டர் வகுப்புக்கள்

Basic புதிய வகுப்புக்கள் 19-12-90 [திங்கள், புதன், வெள்ளி] 22-12-90 [சனி, ஞாயிறு] ஆரம்பமாகின்றன. மேலதிக விபரங்கட்கு நேரில் தொடர்பு கொள்ளவும். Unikoo Computer Centre 37, Clock Tower Road, Jaffna. (வெலிங்டன் சந்திக்கு அருகாமையில்). (15149)

### கடிகாரம் திருத்துனர் தேவை

சகலவித கடிகாரங்களும் திருத்துவதில் அனுபவம் மிக்கவர்கள் தேவை. தகுதிக்கேற்ப சம்பளம் வழங்கப்படும். உடன் நேரில் தொடர்புகொள்ளவும். டவர் வோச் வேக்ஸ், 11 யுபிலி பஜார், யாழ்ப்பாணம் (ராணி சினிமா அருகாமை]. (15169)

### Wanted Audit/ Accounts Trainees

Those who have Passed the G. C. E (A/L) with Accounts as a Subject could Apply. Apply Immediatley to Accounting Systems & Services [Jaffna] Ltd 484/1, Hospital Road, Jaffna. [15175]

### அறிவித்தல்

கட்டுவன் மேற்கு வேதக் கோயிலுக்கு அண்மையில் வசித்த செ. ஜெபராசவின் மனைவி ஜெ. சுசிலாவும், பிள்ளைகள் இருவரும் இடம் பெயர்ந்த விலாசம் தெரியவில்லை. தகவல் அறிந்தவர்கள் இந்த முகவரியுடன் தொடர்புகொள்ளவும்:- B. Gnanachandran, C/o. M. A.Perera, 137, U. C. Quarters, New Town, Anuradhapura. (15171)

### தவறிவிட்டது

வட்டு-மேற்கு, வட்டுக் கோட்டையைச் சேர்ந்த குமரையா ஜீவகுமார் தமது 721531341V நவாலி வீதியில் தலறவிட்டுவிட்டார். கண்டு எடுத்தவர்கள் உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். [15181]

# தேவை

மூன் அனுபவமுள்ள பிளேற்றின் மெஷின் மைன்டர் (Platin Machine Minder) உடன் தேவை. சான்றிதழ்களுடன் கீழ்க்காணும் முகவரிக்கு நேரில் வரவும்.

முகாமையாளர்,
உதயன்,
யாழ்ப்பாணம்.

## 120 ஆம் நாள் கண்ணீர் அஞ்சலி

மலர்வு: 20- 06- 1938



உதிர்வு: 20- 08- 1990

### செபஸ்ரியன் தாசன் தேவஇரக்கராஜ் கர்வலோ

(சின்னக்கடை பாபுஜீ ரெக்ஸ் உரிமையாளர்)

பாசம் பிறப்பிடத்தின் தலைவனே! பண்பின் உறைவிடமே உன் திருமுகத்தைக் காணாது பரிதவித்து நிற்கின்றோம். கடமைக்குச் சென்றாயோ – அங்கு காலன் உன்னைக் கவர்ந்தானோ. உன் வழிகாட்டி இன்றித் தவிக்கின்றோம். எம்மை எல்லாம் தவிக்க விட்டு எங்குதான் சென்றீரோ? எம் இதயத்தில் அணையா ஒளி விளக்கே!

அகால மரணமான உமது ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
தகப்பன், தாய், மனைவி, மக்கள்,
மருமக்கள், மைத்துனர்கள்,
சகோதரர்கள், பேரன்.

44/16A, மணல்தரை லேன்,
கந்தர் மடம்,
யாழ்ப்பாணம். [14330]

## சாவகச்சேரி நகரசபை
# ஆதனவரி அறிவித்தல்

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் உள்ள ஆதனங்களுக்குரிய 1990ஆம் ஆண்டு 3ஆம் 4ஆம் கந்தாயங்களுக்குரிய ஆதனவரியை 28-12-90ஆம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12 00 மணிவரை எதுவித தண்டமுமின்றி செலுத்திக் கொள்ளலாம். எனவே, குறிப்பிட்ட திகதிக்கு முன் தாங்கள் செலுத்த வேண்டிய வரிகளைச் செலுத்திப் பற்றுச் சீட்டைப் பெற்றுக் கொள்ளும்படி ஆதனச் சொந்தக்காரர்களைக் கேட்டுக் கொள்கின்றேன்.

இத்திகதிக்குப் பின்னர் ஆதனவரி செலுத்துவோர் ஆதனவரியுடன் வசிப்பிட ஆதனங்களுக்கு பதினைந்து (15%) வீதமும் வசிப்பிடம் தவிர்ந்த ஏனைய ஆதனங்களுக்கு இருபது (20%) வீதமும் கூடுதலாக செலுத்த வேண்டும் என்பதையும் இத்தால் தெரிவித்துக் கொள்கின்றேன்.

த. நவரத்தினராசா,
செயலாளர்,
நகரசபை, சாவகச்சேரி.

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி. 18-12-90 [சி-5549]

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
### வேலுப்பிள்ளை நடேசபிள்ளை
அவர்கள்
(20 – 12 – 90)

அன்பாலும், பண்பாலும், கடமையாலும்
அனைவரையும் கவர்ந்த திருமேனி காணோம்
செந்தமிழர் திருநாட்டின் உணவுப் பஞ்சம்
தீர இரவு பகல் உழைத்த நெஞ்சம் காணோம்
நன்மதிப்புப் பெற்றவனை இறைவன் ஆண்டு
நாற்பதிற்குள் பறித்தெடுத்த கொடுமை கண்டோம்
அன்னாரின் பிரிவாலே நெகிழும் நெஞ்சம்
அனைத்தோடும் நாம்இணைந்து அஞ்சலிசெய்தோம்!

யாழ். அரச அதிபர்,
யாழ். செயலக பதவி உத்தியோகத்தர்கள்,
யாழ். மாவட்ட உதவி அரசாங்க அதிபர்கள்.
[15157]

யாழ். உதவி உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரியும், புனர்வாழ்வு, புனரமைப்பு செய்திட்டப் பணிப்பாளருமாகிய

### உயர்திரு. வேலுப்பிள்ளை நடேசபிள்ளை
அவர்களின் 31ஆம் நாள் நினைவஞ்சலி

நினைப்பதற்கு ஏற்ற நிறைகுணங்கள் அத்தனையும்
நித்தியமாச் சொத்தாகி நின்றவுயர் நேசன்
தனக்கென வாழாதென்றும் பிறர்க்கிதமாய் வாழ்ந்த
தயாளகுண சீலர் தகவார்ந்த செம்மல்
மனக் கவலை மாற்றும் மதிநுட்ப சீலன்
மக்களுயர் சேவைக்கு வாய்த்த நிறைஞானம்
கனத்தகணிப்பாளர் நம் நடேசபிள்ளை
கண்ணீரஞ்சலிக் காளாய் கடந்துமேவிட்டார்.

ஏற்றத் தாழ்வுகள் இம்மியும் பாரார்
ஏற்ற கடமையை இனிதுற முடிப்பார்
போற்றத் தகுந்தநம் நடேசபிள்ளை
பொறுப்பான பதவிகள் பலபொலிந் திலங்கினரே

நினைவு கூருகிறோம்!
யாழ். செயலக திட்டமிடல் பகுதி,
புனர்வாழ்வு புனரமைப்புப் பகுதி ஊழியர்கள். [15166]

### The St. Peter's Nursary Trimmer Hall
Vembadi Road, Jaffna.

பாலர்களை சேர்ப்பதற்கான விண்ணப்பப்படிவங்களை கிழமை நாட்களில் காலை 10 மணிக்கும் 11மணிக்கும் இடையில் பின்வரும் விலாசத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

"Thevastan"
No. 17, St. Peter's Lane,
Jaffna.

விண்ணப்ப முடிவுத் திகதி: 31 — 12 — 1990
St. Peter's Nursary, Trimmer Hall 07-01-91 ஆரம்பமாகும்.

[15184] Principal.

# 45 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு: 26 – 05 – 1949

உதிர்வு: 06 - 11 - 1990



### திரு. வெற்றிவேலு சரவணபவன்
(பொறியியலாளர் சுமித்றோமோ சிமென்ட் கொம்பனி ஜப்பான்)

தேம்பொழில் சூழ்ந்த மாகியம் பதியில்
செந்தமிழ்ச் செல்வர் வெற்றிவேலுவும்
மங்கை நல்லாள் மாணிக்கமும் செய்த
நற்றவப் பயனாய்த் தோன்றிய புதல்வ
சான்றோர் போற்றும் சரவணபவனே
காங்கேயனில் நுண் பொறியாளனாய்க் கடமை புரிந்தாய்
வெளிநாடு சென்று வேலை செய்கையில்
நின்திறன் கண்டு வியந்து போற்றினர்
அஞ்சா நெஞ்சும் ஆண்மையும் உடையோய்
அன்பும் பண்பும் அறனும் கொண்டோய்
ஏழைகள் தோழா நடுநிலையாளா
குறிப்பு அறிந்து ஒழுங்கும் குணக்குன்றே
அன்பருக் குதவும் அண்ணலே அருமருந்தே;
பாதகர் செய்த பழிச் செயலால்
உன்னுயிர் மாய்ந்ததுவே நொடிப்பொழுதில்
ஐயா, என்றும் மறவோமே நாம் உன்னை!

தங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்
தங்கள் பிரிவால் துயருறும்:
நண்பர்கள்.

மாகியம்பதி,
சண்டிலிப்பாய். (15182)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மண்ணில்: 18 – 2 – 1932

விண்ணில்: 19 – 11 – 1990

திதி: 20 – 12 – 1990

### அமரர் சுப்பிரமணியம் கந்தசாமி
(ஐயனார் கோவிலடி, சுன்னாகம்)

அன்பின் உருவாய் பண்பின் பிறப்பிடமாய் பாசத்துடன் எம்மையெல்லாம் வழிநடத்திச் சென்ற எங்கள் அன்புத் தெய்வமே! கண்ணை இமை காப்பது போல் எம்மையெல்லாம் காத்தீரே காலத்தின் கோலத்தால் காலன் உம்மை அழைத்து 31 ஆம் நாள் உங்கள் பொன்னான நினைவுகள் எம்மைவிட்டு என்றுமே அகலாது.

உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்.
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

'ஈஸ்வரி இல்லம்'
ஐயனார் கோவிலடி,
சுன்னாகம். [15162]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org